# சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை

அனுப்புநர் :

காவல் உதவி ஆய்வாளர்,
கை.களத்தூர் காவல் நிலையம்,
பெரம்பலூர் மாவட்டம்.

பெறுநர் :

கனம் மாவட்ட அமர்வு மற்றும் மகிளா நீதிபதி அவர்கள்
மாவட்ட அமர்வு மற்றும் மகிளா நீதிமன்றம்
பெரம்பலூர்

பொருள் :

**இறந்தவர்**
ராஜேஸ்வரி வயது 17/22
D/O ராஜேந்திரன்.
கிழக்குகாட்டுகொட்டாய். விஜயபுரம்.
நூத்தப்பூர்.
வேப்பந்தட்டை வட்டம். பெரம்பலூர் மாவட்டம்.

பொருள் : குற்றவழக்கு - மர்ஜினில் கண்ட சிறுமி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டபடியால் இவ்வழக்கின் சட்டப்பரிவை மாற்றம் செய்து அறிக்கை சமர்பித்தல் தொடர்பாக

பதர்வை : கை.களத்தூர் காவல் நிலைய கு.எண்: 168/2022 U/S 341, 294(b), 354, 509, 506 (i) IPC @ 341, 294 (b), 363, 366, 366(A), 506 (i), 305 IPC And 11(v) r/w 12 of POCSO ACT 2012

இவ்வழக்கின் புகார்தாரர் ராஜேஸ்வரி வயது 17/22 S/O ராஜேந்திரன் என்பவர் பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், நூத்தப்பூர் (Post), விஜயபுரம், கிழக்கு காட்டு கொட்டாயில் தனது தாய் தந்தையுடன் குடியிருந்து வருகிறேன் என்றும், நான் 12 ம் வகுப்பு முடித்துவிட்டு வீட்டிலிருந்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் அக்கா சரண்யா 23/22 திருமணமாகிவிட்டது. அண்ணன் செந்தில்குமார் 21/22 விவசாய வேலை பார்த்து வருகிறார். என் தம்பி முருகேசன் 15/22 11-ம் வகுப்பு படித்துவருகிறார். நான் துணி துவைபதற்காக 25.10.22 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு வீட்டு பக்கத்திலிருக்கும் ஓடைக்கு சென்றேன். அங்கு பக்கத்து வீட்டுகார் சோலைமுத்து மகன் ராமசாமி, மற்றும் ராமசாமியின் தம்பி வீராசாமி மகன் மாரிமுத்து ஆகிய இருவரும் என்னை வழிமறித்து என்னைக்கா இருந்தாலும் நீ என் மகனுக்குதான்டி என்று அசிங்கமாக திட்டி இதில் எது மாறுபட்டாலும் உயிரோடு விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு அங்கு இருந்து போய்விட்டாடர்கள். நான் துணி

துவைத்துவிட்டு வீட்டுக்கு சென்றுவிட்டேன். அதன்பிறகு ராமசாமி குடித்துவிட்டு வந்து என் வீட்டு அருகே நின்று கொண்டு என் மகளை விட்டுவிட்டு வேறுரோருவனை கல்யாணம் செய்துகொள்வாயா குச்சிகாரி என்று அசிங்கமாக திட்டிகொண்டு இருந்தார். நான் உடனே நோட்டில் இருந்த பேப்பரை கிளித்து என்ன நடந்ததோ அதை எழுதினேன். அதன் பிறகு என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டில் வைத்திருந்த கலைகொல்லி மருந்தை 25.10.22 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு எடுத்து குடித்துவிட்டேன். இதை பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. என் வீட்டின் வெளியில் வாந்தி எடுத்துகொண்டு இருக்கும்போது என் அண்ணன் வந்து பார்த்தான். நான் நடந்ததை சொன்னேன். உடனே என் அப்பாவிற்கு போன்மூலம் சொன்னான். சொன்ன உடன் அப்பா வந்து என்னை டூவீலரில் அழைத்து சென்று வீரகனூரில் ராஜேந்திரன் கிளினிக்கில் முதல் உதவி செய்து பின் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சேலம் GH யில் வந்து சேர்த்தார்கள். உள்நோயாளியாக இருந்தேன். கை.களத்தூர் போலீசார் என்னை விசாரிக்கும்போது என் வழிமறித்து பெண் என்றும் பாராமல் அசிங்கமாக திட்டி கொலைமிரட்டல் விடுத்த ராமசாமி மற்றும் மாரிமுத்து மீது நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த புகார்வாக்குமூலத்தின் பேரில் கை.களத்தூர் காவல்நிலைய கு.எண் : 168/2022 U/S 341, 294(b), 354, 509, 506 (i) IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

28.10.2022 ம் தேதி மாலை 17.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. பழனிசாமி அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று 17.45 மணி முதல் 18.30 மணிவரை சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும் 18.45 மணிக்கு சம்பவ இடத்தில் கிடந்த சுமார் 1 லிட்டர் பிடிக்ககூடிய PARANEX HERBICEDE கலைக்கொல்லி மருந்துபாட்டிலில் சுமார் 50 ML கலைக்கொல்லி மருந்துடன் கூடியது ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி 18.45 மணி முதல் 20.30 மணிவரை சம்பவ இடத்தில் சாட்சிகளை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்து 29.10.2022 ம் தேதி காலை 07.00 மணிக்கு சேலம் அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த வாதி ராஜேஸ்வரி மற்றும் அவரது தந்தை ராஜேந்ரதிரன் தாயார் பாக்கியம் ஆகியோரை பெண் மு.நி.கா.1876 திருமதி.புஷ்பா என்பர் உதவியுடன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து

29.10.2022 ம் தேதி பகல் 12.30 மணிக்கு எதிரிகள் 1. ராமசாமி 2. மாரிமுத்து ஆகியோர்களை கைது செய்து, கனம் மாவட்ட உரிமையியல் மற்றும்

குற்றவியல் நீதித்துறை நடுவர் வேப்பந்தட்டை அவர்கள் முன்பு ஆஜர்படுத்தி 11.11.2022 வரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டும் மீண்டும் 25.11.2022 ம் தேதி வரை நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டு திருச்சி மத்திய சிறையில் விசாரணை கைதியாக இருந்து வருகிறார்கள்.

இன்று 16.11.2022 ம் தேதி காலை 09.10 மணிக்கு பாதிக்கப்பட்ட சிறுமி ராஜேஸ்வரி என்பர் சேலம். அரசு மோ.கு.ம மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உள்ளநோயாளியாக சிகிச்சை பெற்றுவந்தவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக மே.கு.ம. மருத்துவகல்லூரி மருத்துவமனை காவல் நிலையத்தில் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரகுநாதன் என்பவரிடமிருந்து இன்று 16.11.2022 ம் தேதி காலை 15.00 மணிக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரிலும். மேற்படி ராஜேஸ்வரி என்பவரிடம் சேலம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் -IV அவர்கள் 26.10.2022 ம் தேதி பதிவு செய்த மரணவாக்குமூலத்தின் படியும் இன்று 16.11.2022 ம் தேதி 16.00 மணிக்கு இவ்வழக்கின் சட்டப்பிரிவை U/S 341. 294(b). 354, 509, 506 (i) IPC ல் இருந்து e 341, 294 (b). 353, 355, 356(A). 506 (i). 305 IPC And 11(v) r/w 12 of POCSO ACT 2012 ன் படி சட்டப்பரிவு மாற்றம் செய்து அறிக்கை சமர்பிக்கிறேன்.

காவல் உதவி ஆய்வாளர்.
கை.களத்தூர் காவல் நிலையம்.
பெரம்பலூர் மாவட்டம்.
16.11.2022